DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 74/2019

Prosecution witness – PW.14

| | | |
|---|---|---|
| Name | :திரு.கல்யாணகுமார் | Caste: |
| Father's Name | : நாராயணன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

24.09.2025 – 11.15 AM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

1. குற்றச் சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற சேம்பரானது யாருக்கு சொந்தமானது என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆஜர் எதிரிக்கு சொந்தமானது என்பதை வாதி கூறி தெரிந்து கொண்டேன். வாதி கூறியதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணங்களை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை, ஆவணங்கள் எதையும் நான் பார்வையிடவில்லை. வாதி சேம்பரானது எதிரிக்கு சொந்தமானது என்று வாய்மொழியாக கூறிய போதிலும் புலன் விசாரணை அதிகாரியாக நான் வாதியிடம் உமது கூற்றுக்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்று கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை, அவரும் கொடுக்கவில்லை.

2. ஒரு சேம்பர் நடத்துவதற்கு எங்கெங்கு உரிமம் பெற வேண்டும் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு முழுவதுமாக தெரியாது. ஆனால் சுற்றுச்சூழல் துறை, வருவாய் துறை ஆகியோரிடம் அனுமதி பெற வேண்டும் என்பது தெரியும். அந்த அதிகாரிகளிடம் சென்று ஆஜர் எதிரிதான் சுகன்யா சேம்பரின் உரிமையாளர் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் சேம்பர் இருக்கிற இடத்தின் பஞ்சாயத்து அலுவலகம் சென்று ஆஜர் எதிரியின் பெயரில் சேம்பர் உள்ளதா என்பதையும், அவருடைய பெயரில் இல்லை என்றால் யாருடைய

பெயரில் உரிமம் உள்ளது என்பதையும் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் நான் அது பற்றி விசாரிக்கவில்லை. பாதிக்கப்பட்ட நபர்களின் வாக்குமூலங்களிலிருந்து சேம்பரானது ஆஜர் எதிரிக்கு சொந்தமானது என்பதை தெரிந்து கொண்டேன்.

3. சுகன்யா சேம்பர் என்ற ஒன்று நான் கூறும் இடத்தில் உள்ளதா என்பது குறித்து ஆவணங்களை பார்வையிட்டேனா என்றால் அப்படி ஆவணங்கள் எதையும் பார்வையிடவில்லை. பாதிக்கப்பட்ட நபர்களின் வாக்குமூலத்தின் பேரில் நான் அங்கு சென்று பார்வையிட்டேன். சாட்சிகளிடம் இருந்து குடும்ப அட்டையை பெற்று பார்வையிட்டேனா என்றால் இல்லை. அவர்கள் சேம்பரில் வேலை செய்ததாக சொல்லப்படுகிற நாட்களில் அவர்கள் அங்கு தான் வேலை செய்தார்களா அல்லது வேறு இடத்திற்கு வேலைக்கு சென்றார்களா என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் எனது விசாரணையில் அவர்கள் அங்கு தான் வேலை செய்தார்கள் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேன்.

4. சாட்சிகள் சுகன்யா சேம்பரில் வேலை செய்ததாக சொல்லப்படுகிற நாட்களில் அவர்கள் அவர்களுடைய சொந்த ஊரில் அரசின் 100 நாள் வேலை திட்டத்தில் வேலைக்கு சென்றார்களா என்பதை நான் விசாரித்தேனா என்றால் நான் விசாரித்தபோது அவர்கள் சுகன்யா சேம்பரில் வேலை செய்ததாக சொன்னார்கள். நான் அரசின் 100 நாள் வேலை திட்டம் சம்மந்தமாக எந்த கேள்விகளும் சாட்சிகளிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை.

5. ஒரு நபர் சேம்பரின் உரிமையாளரா என்பதை ஆவணங்களை கைப்பற்றி அதன் மூலம் தெரிந்து கொள்ளாமல் வெறும் வாய்மொழி கூற்றை மட்டும் நம்பி அவர் தான் உரிமையாளர் என்பதை கூற இயலாது என்றால் சரியல்ல. கார்த்திக் எனும் சாட்சி எனது விசாரணையிலும்,

நீதிமன்ற சாட்சியத்திலும் அருப்புக்கோட்டை சென்று RDO அலுவலகத்தில் புகார் அளித்ததாக கூறியுள்ளார் என்றால் அது தவறு.

6. அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் அருப்புக்கோட்டை கோட்டாட்சியரிடம் அவர் தகவல் தெரிவித்ததன் பேரில் தான் பரமக்குடி கோட்டாட்சியருக்கு தகவல் தெரிவித்து வந்ததாக எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் சரிதான். நான் அருப்புக்கோட்டை கோட்டாட்சியரை விசாரித்தேனா என்றால் அருப்புக்கோட்டை கோட்டாட்சியரை பற்றியே அவர் என்னிடம் தெரிவிக்கவில்லை.

7. அ.சா.4 நீதிமன்ற சாட்சியத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் சுமார் 3 நபர்கள் வீதம் சேம்பரில் தங்கி வேலை பார்த்ததாகவும், அவ்வாறு தங்குவதற்கு இடம் கொடுத்ததாகவும், அவ்வாறு வேலை செய்த நாட்களில் சம்பளத்தில் பாதியை பிடித்துக் கொண்டு மீதியை கொடுத்ததாகவும், ரூ.40,000/-முன் பணமாக கொடுத்ததாகவும் கூறியுள்ள நிலையில் எனது விசாரணையில் அவர் அவ்வாறு கூறினாரா என்றால் கூறவில்லை.

8. அ.சா.5 நீதிமன்ற சாட்சியத்தில் அவர்களது ஊரில் மழை பெய்யாததால் சுகன்யா சேம்பரைச் சேர்ந்த கணக்குப்பிள்ளை மற்றும் கார்த்தி என்பவர் தன்னை சுகன்யா சேம்பருக்கு வேலைக்கு அழைத்து வந்ததாக போலீசார் விசாரணையில் கூறியுள்ள நிலையில் எனது விசாரணையின் போது அவ்வாறு கூறியுள்ளார்களா என்றால் மழை பெய்யாததால் சேம்பரில் வேலைக்கு சேர்ந்ததாக கூறியுள்ளார். ஆனால் யார் அவரை சேர்த்துவிட்டார் என்பதை கூறவில்லை. ரூ.3,000/- சம்பளத்தில் ரூ.300/-வீதம் கொடுத்துவிட்டு மீத சம்பளத்தை அவர் வாங்கிய முன் தொகையில் கழித்துக் கொள்வதாக கூறியுள்ள நிலையில் எனது விசாரணையில் அது பற்றி கூறவில்லை என்றால் தொகையை குறிப்பிட்டு கூறவில்லை. ஆனால் வேலை பார்த்த கூலியில் இரு பங்கு

தொகையை முன் பணத்தில் கழித்துக் கொண்டும் ஒரு பங்கை சம்பளமாக கொடுப்பதாகவும் கூறியுள்ளார். அங்கு வேலை பார்த்த கார்த்திக் என்பவரை உரிமையாளர் அடித்துவிட்டதாகவும், சேம்பரை விட்டு யாரும் வெளியே போகக்கூடாது என்று கூறி சேம்பரை உரிமையாளர் அடைத்துவிட்டதாகவும், கார்த்திக் தப்பிச் சென்று தகவல் அளித்ததாகவும், அதன் பின்னர் சேம்பரிலிருந்த நபர்களை திருச்சுழி அழைத்துச் சென்று அதிகாரிகள் விசாரித்து விட்டு அனுப்பியதாக எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் அவ்வாறு கூறவில்லை.

9. அ.சா.6 நீதிமன்ற சாட்சியத்தில் ரூ.2,000/-முதல் ரூ.3,000/-க்கு வாரத்திற்கு வேலை செய்வதாகவும், அதில் ஒரு பங்கை கொடுத்துவிட்டு மீத பணத்தை முன் தொகையில் கழித்து கொள்வதாக கூறியுள்ளாரா என்றால் தொகையை பற்றி எதுவும் கூறவில்லை. ரூ.40,000/-பெற்றுக் கொண்டு நள்ளிரவு 01.00 மணியிலிருந்து மதியம் 01.00 மணிவரையில் வேலை செய்வோம் என்று எனது விசாரணையில் தெரிவித்துள்ளாரா என்றால் முன் தொகை பற்றி கூறவில்லை. எனது விசாரணையின் போது காலை முதல் இரவு வரை வேலை செய்ய சொல்வதாக கூறினார்.

10. அ.சா.7 நீதிமன்ற சாட்சியத்தில் ரூ.5,000/-க்கு வாரத்திற்கு வேலை செய்வதாகவும், அதில் ஒரு பங்கை கொடுத்துவிட்டு மீத பணத்தை முன் தொகையில் கழித்து கொள்வதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. தனக்கும் தனது மனைவிக்கும் சேர்த்து முன் பணமாக ரூ.40,000/- பெற்றுக் கொண்டு காலை 04.00 மணியிலிருந்து இரவு 07.00 மணிவரையில் வேலை செய்வோம் என்று எனது விசாரணையில் தெரிவித்துள்ளாரா என்றால் முன் தொகை பற்றி கூறவில்லை. எனது விசாரணையின் போது காலை முதல் இரவு வரை வேலை செய்ய சொல்வதாக கூறினார். பின்னர் கார்த்திக் என்பவரை உரிமையாளர்

கம்பால் அடித்து ஒரு கோடு போட்டு அந்த கோட்டை தாண்டினால் அடிவிழும் என்று மிரட்டியதாக கூறினாரா என்றால் இல்லை. அதன் பின்னர் அபிராமம் மற்றும் திருச்சுழி வட்டாட்சியர் மற்றும் அபிராமம் போலீசார் வந்து அவர்களை மீட்டுச் சென்றதாக கூறியுள்ளாரா என்றால் அது பற்றி கூறவில்லை.

11. சாட்சி கார்த்திக் என்பவர் உலக்குடியை சேர்ந்த முத்துச்சாமி என்பவர் மூலமாக வேலைக்கு சேர்ந்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. சுமார் 6 மாதங்கள் வேலை பார்த்ததாகவும், அங்கு ஓட்டு வீடு கட்டிக் கொடுத்ததாகவும், சேம்பரில் கொடுத்த சம்பளத்தில் காய்கறிகள் வாங்கி சமைத்து சாப்பிட்டதாகவும், வாரம் 7 நாட்கள் வேலை பார்த்தால் 1 நாள் சம்பளம் பெற்றதாகவும், ஒரு நாளைக்கு 1000 கற்கள் வீதம் ஒரு வாரத்திற்கு 5000 கற்கள் அருப்பதாகவும், முன் பணமாக வாங்கிய ரூ.40,000/–த்தில் சம்பள பணத்தை கழித்துக் கொள்வதாகவும், தனது மனைவி ரேஷன் கடையில் அரிசி வாங்குவதற்கு தன்னையும் தனது குழந்தையையும் விட்டு விட்டு சென்றபோது பச்சைக் கம்பால் கார்த்திக் என்பவரை உரிமையாளர் அடித்து சேம்பரில் கல் எரியும் இடத்தில் கட்டி வைத்ததாகவும், ஊரிலிருந்து யாரேனும் கேட்க வந்தால் அவர்களையும் கட்டி வைப்பதாக எனது விசாரணையில் கூறினாரா என்றால் தொகையை பற்றி குறிப்பிடவில்லை. ஆனால் சேம்பரில் அவர்கள் தங்கியதாகவும், மற்ற விபரங்களை பற்றியும் கூறியுள்ளார்கள்.

12. அ.சா.9 நீதிமன்ற சாட்சியத்தில் மேலாளர் தன்னை அடித்ததாகவும், அபிராமம் போலீசார் தன்னை அழைத்துச் சென்றதாகவும் கூறியுள்ள நிலையில் எனது விசாரணையில் கூறியுள்ளார்களா என்றால் இல்லை.

13. அ.சா.11 எனது விசாரணையில் வேலை ஒழுங்காக செய்யவில்லை

என்றால் கம்பை வைத்துக்கொண்டு வேலை வாங்குவார்கள் என்றும் மேஸ்திரியுடன் பிரச்சனை ஏற்பட்டதாகவும், பாதி தொகையை சம்பளமாக கொடுப்பதாகவும், ஆஜர் எதிரி சுகன்யா சேம்பரின் உரிமையாளர் என்றும் கூறியுள்ளாரா என்றால் இல்லை.

14. அ.சா.12 அவர் பெற்ற முன் பணத்தை உரிமையாளர் வாங்கி கொண்டதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. ரூ.2000/—சம்பளத்தில் ரூ.1500 யை எடுத்துக் கொண்டு ரூ.500/—கொடுத்ததாக கூறியுள்ளாரா என்றால் தொகையை குறிப்பிட்டு கூறவில்லை. அரசு துறையிலிருந்து ஆட்கள் வந்து அபிராமம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதாக கூறியுள்ளாரா என்றால் நிலையம் அழைத்துச் சென்றது பற்றி கூறவில்லை.

15. 30.06.2012 ம் தேதி சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். அவர் அன்றைய தினமே சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். 01.07.2012 ம் தேதி அபிராமம் காவல் நிலையத்திற்கு அ.சா.1 தகவல் அளித்துள்ளார் என்றால் சரிதான். அந்த தகவலானது தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். யார் தட்டச்சு செய்தார் என்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை 01.07.2012 ம் தேதியன்றே நான் விசாரணை செய்துவிட்டேன் என்றால் சரிதான். அதன் பின்னர் மறு விசாரணை எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

16. அ.சா.4 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகளை 02.07.2012 ம் தேதி நான் விசாரித்ததாக ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். அவர்களை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் அவர்களது ஊரில் வைத்து விசாரித்தேன். அது சம்மந்தமாக இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை. அவர்களது ஊருக்கு சென்றது குறித்து பொது

நாட்குறிப்பேட்டில் குறிப்புகள் உள்ளதா என்றால் 15 வருடங்களுக்கு மேலாகிவிட்டதால் அது பற்றி எனக்கு நினைவு இல்லை. ஆனால் பொது நாட்குறிப்பேட்டை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளையும் எங்கு வைத்து விசாரித்தேன் என்பதற்கு பொது நாட்குறிப்பேட்டை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். கொத்தடிமை தொழிலாளர்களாக வேலை செய்ததாக சொல்லப்படுகிற நபர்களை மீட்டதாக வருவாய் துறையினர் ஏதேனும் ஆவணங்கள் கொடுத்தார்கள் என்றால் இல்லை.

17. நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரி சுகன்யா சேம்பரின் உரிமையாளரே இல்லை என்றாலும் அவ்வாறு உள்ள நிலையில் எதிரியானவர் வழக்கில் சட்ட விரோதமாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றாலும் நானும் ஆவணங்களை பெற்று உரிமையாளர் யார் என்பதை தெரிந்து கொள்ளாமல் உரிய புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் எந்த விதத்தில் குற்றமானது நடைபெற்றது என்று விபரம் சொல்லப்படவில்லை என்பதால் நான் சரியான விதத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.